**இலங்கை மல்யுத்தச் சம்மேளனம் - 2024**

----------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை மல்யுத்தச் சம்மேளனத்தின் (''சம்மேளனம்'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் விரிவான வருமான செலவுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவால் திருத்தப்பட்ட 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 21 அ ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சம்மேளனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சம்மேளனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சம்மேளனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சம்மேளனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக கொள்வதற்காகவேயன்றி சம்மேளனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சம்மேளனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சம்மேளனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சம்மேளனம் செயற்படுகின்றதாஎனவும்இ

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்இ

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்இ

.

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2024 மே 03 ஆம் திகதியிடப்பட்ட 2382.∵32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கங்களின் ஒழுங்குவிதிகள் | | | |
| | (i) II ஆம் பகுதியின் 3 (1) (தை) ஆம் பிரிவு | சம்மேளனமானது, தற்போதுள்ள சர்வதேச தரநிலையை மேம்படுத்துவதற்கான உத்திகள், உரிய காலப்பகுதிக்குள் எதிர்பார்க்கப்படும் இலக்குகள் மற்றும் செயல்திறன் மட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய நிறுவனத் திட்டத்தை இந்த ஒழுங்குவிதிகள் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் அங்கீகாரத்திற்காக விளையாட்டுத்துறை பணிப்பாளர் நாயகத்திடம் | சம்மேளனமானது நிறுவனத் திட்டத்தைத் தயாரித்துள்ளது, எனினும் இன்றுவரை அதனை விளையாட்டுத்துறை பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கவில்லை. | விளையாட்டு விதிமுறைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பித்தல் வேண்டும். எனினும், அறிக்கை சமர்ப்பிக்கப்படும் திகதி வரையிலும் சம்மேளனமானது குறித்த நிறுவனத் திட்டத்தைச் சமர்ப்பிக்கத் தவறியுள்ளது. | | |
| (ii) | III ஆம் பகுதியின் 6(ஓணை) ஆம் பிரிவு | அடுத்த ஆண்டிற்கான வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, நடைமுறை ஆண்டு முடிவடைவதற்கு 03 மாதங்களுக்கு முன்னதாக பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், அறிக்கையானது சமர்ப்பிக்கப்படும் திகதி வரையும் அது சமர்ப்பிக்கப்படவில்லை | சம்மேளனமானது வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்திருந்த போதிலும், அது சம்மேளனத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை | விளையாட்டு விதிமுறைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (iii) | III ஆம் பகுதியின் 6(ஓஓஎணை) ஆம் பிரிவு | விளையாட்டுக் கழகங்கள், மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள், மாகாண விளையாட்டுச் சங்கங்கள் அல்லது விளையாட்டுக் கழகங்கள் மற்றும் உறுப்பினர் அமைப்புகளின் தேர்தல்கள் உள்ளிட்ட அனைத்துச் செயல்பாடுகளின் விபரங்களும் சம்மேளனத்தினால் வருடாந்தம் விளையாட்டுத்துறை பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அறிக்கையானது சமர்ப்பிக்கப்படும் திகதி வரையும் அவை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | அமைப்புகளின் செயற்பாடுகளைப் பற்றிய தகவல்களை வழங்கக்கூடிய தொடர்புடைய ஆவணங்கள் எதுவுமே தற்போது எங்களிடம் இல்லை | விளையாட்டு விதிமுறைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சம்மேளனத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,246,009 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,746,025 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 500,016 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது போட்டித்தொடர்களுக்கான செலவுகள் ரூபா 14,614,464 ஆல் அதிகரித்தமையே இப்பின்னடைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டிற்கான தேசிய விளையாட்டு நாட்காட்டியின்படி, 5 உள்நாட்டுப் போட்டித் தொடர்களை நடத்துவதற்கும், 9 சர்வதேசப் போட்டித் தொடர்களில் பங்கேற்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், சம்மேளனமானது 2 வெளிநாட்டுப் போட்டித் தொடர்களில் பங்கேற்கவில்லை. மேலும், மல்யுத்த வீரர்களின் தற்போதைய தரவரிசைகள் உள்ளிட்ட அவர்களது செயல்திறன் பற்றிய தகவல்கள், அறிக்கையானது சமர்ப்பிக்கப்படும் திகதி வரையும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சம்மேளனத்தில் நிலவும் பொருளாதாரச் சிக்கல்களே இந்தத் தோல்விக்கான பிரதான காரணமாகும் | தேசிய விளையாட்டு நாட்காட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ள செயல்பாடுகள் திட்டமிட்டபடி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மல்யுத்த வீரர்களுக்கு மாதாந்த ஊட்டச்சத்து கொடுப்பனவுகளை வழங்குவதற்காக, விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 17,041,500 மற்றும் 2025 பெப்ரவரி மாதத்துடன் முடிவடையும் காலப்பகுதிக்காக ரூபா 1,674,000 முறையே சம்மேளனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், மல்யுத்த வீரர்களைத் தெரிவு செய்வதற்கான அளவுகோல்கள் மற்றும் மேற்கூறிய ஊட்டச்சத்து கொடுப்பனவு வழங்கப்படுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல் என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. தேசிய மல்யுத்த வீரர்களின் பட்டியலில் பெயர்கள் சேர்க்கப்படாத நபர்களுக்கு ரூபா 4,072,500 பெறுமதியான ஊட்டச்சத்து கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | இந்த வீரர்கள் 2023 ஆம் ஆண்டு தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டனர் | அனைத்துக் கொடுப்பனவுகளும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் தகுதி அளவுகோல்களினால் கண்டிப்பாக நிர்வகிக்கப்படுவதைச் சம்மேளனம் உறுதிப்படுத்த வேண்டும். |